

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | பிப்ரவரி 02, 2017 | புரட்சி 16 | முழக்கம் 03 | விலை: ரூ.3.00


## கழகத் தோழர்கள் எழுச்சியுடன் நடத்தினர்

# தமிழ்ப் புத்தாண்டு–கலை விழாக்கள்

*திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தமிழர் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு விழாக்கள் கலை விழாவாக நடத்தப்பட்டன.*

சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகம் அனைத்துக் கட்சியினரையும் இணைத்து தமிழர் திருநாள் விழாவை கடந்த 16 ஆண்டுகளாக நடத்தி வருகிறது. 17ஆம் ஆண்டு தமிழர் திருநாள் விழா ஜன.12ஆம் தேதி இராயப்பேட்டை வி.எம். சாலையில் எழுச்சியுடன் கலை விழா இசை நிகழ்ச்சிகளோடு நடை பெற்றது. புதுச்சேரி 'அதிர்வு' கலைக் குழுவினரின் பறை, கிராமிய நடனம், பாடல் நிகழ்ச்சிகள், பகுதி மாணவ, மாணவிகள் பங்கேற்ற மாறுவேடப் போட்டிகள் நடைபெற்றன. தமிழக வாழ்வுரிமை கட்சி நிறுவனர் வேல்முருகன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றி, விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

தொடர்ந்து 'அருண் ரிதம்ஸ்' குழுவினரின் கானா, நாட்டுப்புற, வெள்ளித் திரைப்பாடல்களின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கருத்தாழ மிக்க பழைய திரைப்படப் பாடல்களையும் கானா பாடல்களையும் குழுவினர் பாடி கூட்டத்தை மகிழ்வித்தனர். திருவல்லிக் கேணி பகுதி கழகத் தோழர்கள் சோ. தமிழரசு, சு. பிரகாசு, செ. செந்தில் விழாவுக்கு முறையே தலைமை, முன்னிலை, வரவேற்புரை வழங்கினர். மாவட்ட செயலாளர் இரா. உமாபதி ஒருங்கிணைத்தார். விழாவுக்கான விளையாட்டு போட்டிகளை ஜன.8 அன்று உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்க செயலாளர் ஆர். கிருட்டிண குமார் தொடங்கி வைத்தார்.

கானா ஜெகன் பாடலுக்கு மிகுந்த வரவேற்பு இருந்தது. சாவு வீட்டில் மட்டும் பாட அனுமதிக்கப்பட்ட எங்களை பொது விழாவுக்கு அழைத்துப் பாட வைத்த இந்த அமைப்புக்கு நன்றி செலுத்து கிறேன். அந்த மகிழ்வுக்காக நடனம் ஆடுங்கள் என்று பலத்த கரவொலிக் கிடையே அறிவித்தார்.

தோழர்கள், பொது மக்கள் இணைந்து விழாவின் நிறைவாக பாடல்களுக்கு நடனமாடிய காட்சி, அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கச் செய்தது.

### சென்னை செனாய் நகரில்...

சென்னை செனாய் நகரில் கழகத் தோழர் ஆ.வ.வேலு தொடர்ந்து நடத்தி வரும் தமிழர் திருநாள் விழா, இவ் வாண்டு ஜன.14 அன்று பச்சையப்பன் கல்லூரி பின்புறத்திலுள்ள வைத்திய நாதன் வீதியில் அதிர்வு பறை இசை நடன நிகழ்ச்சிகளோடு நடந்தது. திரைப்பட இயக்குனர் மு.களஞ்சியம் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றினார். டேவிட் பெரியார் விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.

### மயிலையில்

மயிலாப்பூர் செயின்ட் மேரீஸ் பாலம் அருகே ஜன.15ஆம் தேதி தமிழர் திருநாள் விழாவை பகுதி கழகத்தினரும் மகளிர் குழுவினரும் இணைந்து நடத் தினர். மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங் கப்பட்டன. அதிர்வு குழுவினர் மயிலைப் பகுதியில் வீதி வீதியாகத் தோழர் களுடன் பறை இசை முழங்கிச் சென்றனர்.

### நங்கவள்ளியில்...

சேலம் மாவட்டம் நங்கவள்ளியில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள் விழா ஜனவரி 29, மாலை 6 மணியளவில் விரட்டு கலை பண்பாட்டு மய்யத்தின் கலை விழாக் களோடு தொடங்கியது. இரவு 10 மணி வரை நடந்த கொள்கை பரப்பும், கலை நிகழ்வுகளைப் பார்க்க பெரும் எண்ணிக்கையில் மக்கள் திரண்டு வந்திருந்தனர். நிகழ்வுக்கு த. கண்ணன் (நகர செயலாளர்) தலைமை தாங்க, த. மனோஜ்குமார் (துணைத் தலைவர்) வரவேற்புரையாற்றினர். தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப் பாளர் வீ.சிவகாமி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரை யாற்றினர். நகர துணைச் செயலாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

### காவலாண்டியூரில்...

மேட்டூர் காவலாண்டியூரில் தமிழர் திருநாள் புத்தாண்டு விழா, ஜன.16 அன்று விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்ச்சிகளுடன் எழுச்சியுடன் நடந்தன. பெரியார் விளையாட்டுக் குழு தமிழ்நாடு மாணவர் கழகம் இணைந்து நடத்திய விழாவில் விரட்டு கலை பண்பாட்டு மய்யத்தின் கலை நிகழ்ச்சிகள் 3 மணி நேரத்துக்கும் மேலாக சிறப்புடன் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். பெரியார் விளையாட்டு குழுவைச் சார்ந்த தோழர்கள் சசிகுமார், சேகர், மாணவர் கழகத் தோழர்கள் பிரபு, தணிகைச் செல்வன், கழகப் பேச்சாளர் காவை இளவரசன், காவலாண்டியூர் ஒன்றிய செயலாளர் ஈசுவரன் ஆகி யோர் முன்னின்று ஏற்பாடுகளை செய்தனர். கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, ஊராட்சி ஒன்றியத் தலைவர் அ.இ.அ.தி.மு.க. வைச் சார்ந்த பழனிச்சாமி விழாவில் பங்கேற்று சிறப்பித்தனர்.

கழக கட்டமைப்புக்கு நிதி வழங்கியோருக்கு விழாவில் சிறப்பு செய்யப்பட்டது.

### ஈரோட்டில் பொங்கல் விழா

ஈரோடு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 29,01,2017 ஞாயிறு அன்று லட்சுமி நகரின் அருகிலுள்ள அண்ணா நகரில் , அம்மக்களோடு இணைந்து பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. நண்பகல் முதல் சிறுவர், இளைஞர் பொதுமக்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. மாலை சமத்துவப் பொங்கல் வைத்து ஊர்ப் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

மாலை 6-30 மணிக்கு மா. ஜெய பாரதி (தமிழ்நாடு மாணவர் கழகம்) வரவேற்புரையாற்ற, ப.இரத்தினசாமி (அமைப்புச் செயலாளர்) தலைமை யிலும், அண்ணா நகரைச் சேர்ந்த இராமசாமி, தமிழ்மணி, தி.வி.க. மாவட்ட செயலாளர் கு.சண்முகப் பிரியன், வேணுகோபால், மாவட்ட தலைவர் நாத்திக ஜோதி, சித்தோடு எழிலன் ஆகியோர் முன்னிலையிலும், சித்தோடு முருகேசனின் பகுத்தறிவுப் பாடலுடன் கூட்டம் துவங்கியது.

தொடர்ந்து மூத்த வழக்குரைஞர் பா.ப. மோகன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி), தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி ஆகியோர் சிறப் புரையாற்றினர். விளையாட்டுப் போட்டி களில் வெற்றி பெற்றவர்களுக்கும் கலந்துகொண்டவர்களுக்கும் புத்தகப் பரிசுகளை திருப்பூர் துரைசாமி (பொருளாளர்) சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் வழங்கினர்.

தமிழிசைப் பாடல்களுக்கு சென்னி மலை ஆசிரியர் சுப்பிரமணி, ரகு ஆகியோர் பரத நாட்டியம் நடைபெற்றது. இறுதியாக இரா. கமலக் கண்ணன் நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது.

இக்கூட்டத்தினை அண்ணாநகர் மக்களோடு இளங்கோ , சம்பத் மற்றும் அடேங்கப்பா மன்றத்தினர் ஏற்பாடு செய்திருந்தினர். கூட்டத்தில் சித்தோடு நட்ராஜ், பிரபு, கதிர், ரமேஷ் , பிரபு , கிருஷ்ணமூர்த்தி, பிரசாந்த், ஈரோடு சிவானந்தம், இராசன்னா, பவானி வினோத், வேல்முருகன், ஜெகன், காவலாண்டியூர் சித்துசாமி , ஈசுவரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கொளத்தூரில் பெரியார் படிப்பகம் திறப்பு

மேட்டூர் அருகே உள்ள கொளத்தூரில் திராவிடர் விடுதலைக் கழக சார்பில் பெரியார் படிப்பகத் திறப்பு நிகழ்வு ஜன.28 மாலை 5 மணி யளவில் சிறப்புடன் நடைபெற்றது. பறை முழக்கத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின படிப்பகத்தை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் திறந்து வைத்தார். கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வராக இருந்து ஓய்வு பெற்ற மறைந்த டாக்டர் மே.பொ. ஆறுமுகம், படிப்பகத்துக்காக 5 செண்ட் நிலத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் பெயருக்கு பெரும் கொடை உள்ளத்தோடு வழங்கினார். ஏற்கெனவே சிறிய அளவில் இயங்கி வந்த இந்த படிப்பகம், இப்போது புதிய பொலிவுடன் சீரமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக நிலம் வழங்கிய மருத்துவர் மே.பொ. ஆறுமுகம் அவர்களின் மகனும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முன்னாள் முதல்வருமான மருத்துவர் ஆ. துரைசாமி பங்கேற்றார். படிப்பகத்தைத் திறந்து வைத்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:



"பெரும் கொடை உள்ளத்தோடு மறைந்த மருத்துவர் மே.பொ. ஆறுமுகம், பொது மக்களுக்கு பயன்படும் நோக்கத்தோடு இந்த நிலத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீது மிகுந்த நம்பிக்கை வைத்து எழுதித் தந்திருக்கிறார். கழகத்தின் தலைவர் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கை கழகத்துக்கு பெருமை சேர்க்கிறது. ஊர் ஊராக படிப்பகங்களை அமைத்து மக்களை அறிவார்ந்தவர்களாக மாற்ற வேண்டும் என்பது சுயமரியாதை இயக்கத்தின்

(3ஆம் பக்கம்)

# தமிழ்ப் புத்தாண்டா? சமஸ்கிருதப் புத்தாண்டா?

தை முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டு. திருவள்ளுவர் ஆண்டுதான் தமிழருக்கான ஆண்டு கணக்கு. இதற்கு மாறாக சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்று பார்ப்பனர்கள் தமிழர்கள் மீது திணித்தனர்.

அந்த தமிழ்ப் புத்தாண்டுகளுக்கு 60ஆம் ஆண்டு கணக்குகள் மட்டுமே உண்டு. அதில் ஒன்றுகூட தமிழ்ப் பெயரே இல்லை. அத்தனையும் வடமொழிப் பெயர்கள்.

60 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் முதலாம் ஆண்டிலிருந்துதான் தொடங்க வேண்டும். 60 வயதுக்கு மேல் வாழ்வோரை இந்த வடமொழிப் பெயரை வைத்து வயதைக் கணக்கிட முடியாது.

'சஷ்டியப்தப்பூர்த்தி' என்று 60 ஆண்டை பார்ப்பனர்கள் விழாவாகக் கொண்டாடுவதன் நோக்கம் 60க்கு மேல் ஆண்டுகளுக்கு பெயர் கிடையாது என்பதால்தான், சித்திரையில் தொடங்கும் "தமிழ்ப் புத்தாண்டு" என்று பார்ப்பனர்கள் கூறும் 60 ஆண்டுகளின் பெயர்களைப் பாருங்கள்!

| | |
|---|---|
| 01. பிரபவ | 31. ஹேவிளம்பி |
| 02. விபவ | 32. விளம்பி |
| 03. சுக்ல | 33. விகாரி |
| 04. பிரமோதூத | 34. சார்வரி |
| 05. பிரசோற்பத்தி | 35. பிலவ |
| 06. ஆங்கீரச | 36. சுபகிருது |
| 07. ஸ்ரீமுக | 37. சோபகிருது |
| 08. பவ | 38. குரோதி |
| 09. யுவ | 39. விசுவாசுவ |
| 10. தாது | 40. பரபாவ |
| 11. ஈஸ்வர | 41. பிலவங்க |
| 12. வெகுதானிய | 42. கீலக |
| 13. பிரமாதி | 43. சௌமிய |
| 14. விக்கிரம | 44. சாதாரண |
| 15. விஷு | 45. விரோதகிருது |
| 16. சித்திரபானு | 46. பரிதாபி |
| 17. சுபானு | 47. பிரமாதீச |
| 18. தாரண | 48. ஆனந்த |
| 19. பார்த்திப | 49. ராட்சச |
| 20. விய | 50. நள |
| 21. சர்வசித்து | 51. பிங்கள |
| 22. சர்வதாரி | 52. காளயுக்தி |
| 23. விரோதி | 53. சித்தார்த்தி |
| 24. விக்ருதி | 54. ரௌத்திரி |
| 25. கர | 55. துன்மதி |
| 26. நந்தன | 56. துந்துபி |
| 27. விஜய | 57. ருத்ரோத்காரி |
| 28. ஜய | 58. ரக்தாட்சி |
| 29. மன்மத | 59. குரோதன |
| 30. துன்முகி | 60. அட்சய |

60 வடமொழிப் பெயர்களைக் கொண்ட ஆண்டுகள் எப்படி தமிழ்ப் புத்தாண்டாகும்?

# பீட்டா அமைப்பு என்ன செய்கிறது? அதிர்ச்சித் தகவல்கள்

சர்வதேச அளவில் விலங்குகளின் உரிமைக்காகப் போராடும் ஒரு நிறுவனமாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் 'பீட்டா' நிறுவனம், 1980ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள வர்ஜினியாவில் தொடங்கப்பட்டது. செல்லப் பிராணி வளர்ப்போர், அவற்றின் மீது செலுத்தும் அன்பு மட்டுமே இந்த நிறுவனத்தின் மிகப் பெரிய மூலதனம். அந்த மூலதனத்தை, முதலீடாக மாற்றியதால் கடந்த 35 ஆண்டுகளில் 30 இலட்சம் பேர் பீட்டாவில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். இலாப நோக்கு இல்லாத நிறுவனமாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் இந்த 'பீட்டா' ஆண்டொன்றுக்கு சுமார் 43 மில்லியன் அமெரிக்க டாலர்களை வருவாயாக ஈட்டி வருகிறது. அதாவது கிட்டத்தட்ட இந்தியப் பணம் 300 கோடி ரூபாய்.

அமெரிக்காவில்தான் உலகிலேயே அதிகமாக செல்லப் பிராணிகள் வளர்க்கப்படுகின்றன. அங்கு அனாதையாக மீட்கப்படும் செல்லப் பிராணிகளை, உரிமையாளர்கள் 15 நாட்களுக்குள் மீட்டுச் செல்ல வில்லையென்றால், அதனைக் கருணை கொலை செய்ய சட்டம் அனுமதிக்கிறது. இப்படி கருணைக் கொலை என்ற பெயரில் ஆயிரக்கணக்கான நாய்கள், பூனைகளை பீட்டா நிறுவனம் கொன்று குவித்திருப்பதாக புள்ளி விவரங்களுடன் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தச் செய்தி தற்போது ஆவணப் படங்களுடன் ஆதாரப் பூர்வமாக வெளியாகியுள்ளது. ஆதாரங்களை வெளியிட்டிருக்கிறவர் 'நேதன் இனொக்ராட்' என்ற சமூக ஆர்வலர்.

1998 முதல் 2015ஆம் ஆண்டு வரை மொத்தமாக 34,970 நாய்கள் மற்றும் பூனைகளை 'பீட்டா' கொலை செய்துள்ளதாக அதிகாரப்பூர்வமான தகவல்கள் வெளியாகியுள்ளன. பீட்டா மொத்தமாக தத்தெடுத்த நாய், பூனைகளின் எண்ணிக்கை 40,438. அதில் உயிரோடு உள்ளதாக பீட்டா அளித்த விலங்குகளின் எண்ணிக்கை 5,468. ஆக 34,970 விலங்குகளைக் கொன்றுவிட்டு, மீதி விலங்குகளை மட்டுமே வைத்துள்ளனர். இந்த 5 ஆயிரம் விலங்குகளைப் பாதுகாக்கத்தான் வருடத்திற்கு 300 கோடி ரூபாய் வருமானம். பீட்டா அமைப்பு வீட்டு விலங்குகளைக் கொலை செய்வதற்கான காரணம் இறைச்சிக்காகவோ, தோலுக்காகவோ அல்ல. அவற்றைப் பராமரிக்க ஏற்படும் செலவைக் குறைப்பதற்காகவும், பல்வேறு இடத்திலிருந்து கிடைக்கும் நிதியை அதிகமாகக் கையாள்வதற்காகவும் கொலை செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் வர்ஜீனியா மாகாணத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம், பல தகவல்கள் பெறப்பட்டன. அதில் கிடைத்த அதிர்ச்சித் தகவல்கள்தான் இந்த புள்ளி விவரங்கள். இதில் பெரிய கொடுமை என்னவென்றால் இவ்வாறு கருணைக் கொலை செய்யப்பட்ட விலங்குகள் பீட்டா கையில் கிடைத்த 24 மணி நேரத்தில் கொலை செய்யப்பட்டதுதான்.

15 நாட்கள் வரை அந்த விலங்குகளின் உரிமையாளர் வருகின்றாரா இல்லையா என்று காத்திருக்க வேண்டும்; 15 நாட்களுக்குப் பிறகும் வராவிட்டால்தான் அந்த விலங்குகளைக் கொல்ல வேண்டும் என அமெரிக்கச் சட்டம் கூறுகின்றது; அந்த 15 நாட்கள்கூட காத்திருக்காமல் இவர்கள் விலங்குகளைக் கொலை செய்துள்ளார்கள்.

- பீட்டா நிறுவனத்தின் வண்டிகளிலேயே விலங்குகளைக் கொல்வதற்கான விஷ ஊசிகளைக் கொண்ட பைகள் எப்போதும் தயார் நிலையில் இருக்கின்றன.
- கொல்லப்பட்ட சில வகை விலங்குகளின் உடல்களைப் பதப்படுத்தி வைக்க, 9000 டாலர்கள் செலவில், ஒரு பெரிய குளிர் பதன இயந்திரத்தையே பீட்டா நிறுவனம் இயக்கி வருகிறது.
- 2011ஆம் ஆண்டு மட்டும் சுமார் 96 சதவீதம் வீட்டு விலங்குகளைக் கொன்றிருக்கிறது 'பீட்டா'. அதேபோல் 2012இல் 602 நாய்கள், 1,045 பூனைகளைக் கொன்று குவிந்திருக்கிறது.
- மொத்தத்தில் கடந்த 11 ஆண்டுகளில் மட்டும், சுமார் 30 ஆயிரம் விலங்குகளைக் கொன்றிருக்கிறது 'பீட்டா'.
- கருணைக் கொலை என்ற பெயரில் அமைதி யாகக் கொல்லப்படும் இந்த விலங்குகள், சத்தமன்றி அப்புறப்படுத்தப்படுகின்றன. சில நேரங்களில் குப்பைகளைக் கட்டுவதுபோல, பிளாஸ்டிக் பைகளில் மூடடை கட்டப்பட்டுத் தூக்கியெறியப்பட்டிருக்கின்றன.
- இது குறித்து குரலெழுப்பிய சில ஆர்வலர் களிடம், சட்டரீதியாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று அலட்சியமாகப் பதிலளித்திருக்கிறது பீட்டா.

### காவிகளும், பீட்டாவும்

பீட்டாவைப் போலவே பசு மாடுகளைப் பாதுகாக்கின்றோம் என்று இங்கேயும் காவிக் கூட்டம் கூறுகிறது. காவிகளும் பீட்டாவும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.

பசுக்கள் எங்களது கோமாதா என்று சொல்லும் காவிகள் பசுக்களை கோசாலையில் வைத்து பாதுகாக்க வேண்டும் என்றும் அதை அடிமாட்டுக்கு விற்றுவிடக் கூடாது என்றும் கோரிக்கை விடுத்து வந்தனர். கோசாலைகளில் இவர்கள் பசுக்களை பாதுகாக்கின்றார்கள் என்று கருதும் இந்து மத நம்பிக்கையாளர்கள் நிதிகளை இவர்களுக்கு வாரி வழங்குகின்றனர். தமிழகத்தில் உள்ள கோசலைகளில் இருந்த 6000 பசுமாடுகள் மாயமாக மறைந்த இரகசியம் கண்டுபிடிக்கப் பட்டது; பிறகு ஆய்வு செய்ததில் அங்குள்ள பசுக்களை அவர்களே அடிமாட்டிற்கு விற்பனை செய்தது தெரிய வந்தது; இதே வேலையைத்தான் பீட்டா வேறு பெயர்களில் செய்து வருகிறது.

# பெரியார் தொண்டர் கோபி நாகப்பன் மறைவு

ஈரோடு வடக்கு மாவட்டம் கோபி நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவரும், நமது கழகத் தோழர் மணிமொழி தந்தையும், நம் கழகத் தோழர் நிவாஸ் மாமனாருமான தோழர் நாகப்பன் கடந்த 12.01.2017 அன்று உடல்நலக் குறைவுக் காரணமாக இயற்கை எய்தினார். அவரின் இறுதி நிகழ்வு உறவினர்களின் பெரும் ஒத்துழைப்போடு எந்தவிதமான சடங்குகள் இல்லாமல் கழக மகளிர் முன்நின்று உடல் அடக்கம் நிகழ்வினை செய்தனர். வீட்டில் இருந்து உடல் அடக்கம் செய்யும் சுடுகாடு வரைக்கும் பெண்களே சுமந்து சென்று உடல் அடக்கம் செய்யப்பட்டது. உடல் அடக்கத்திற்கு பின் கருப்பு, கருமாதி உள்ளிட்ட எந்த நிகழ்வும் நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டது. தோழரின் இல்லத்தில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. இரங்கல் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மாநில அமைப்பு செயலாளர் இரத்தினசாமி, மாநில வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன், தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் ஆசிரியர் சிவகாமி, தபெதிக ஈரோடு மாவட்ட தலைவர் குணசேகரன், திராவிடர் கழகம் யோகனந்தம், இந்திய கம்யூனிஸ்ட் வழக்கறிஞர் சோமசுந்தரம், மா. கம்யூனிஸ்ட் அய்யாவு, மதிமுக மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் கந்தசாமி, தாய் தமிழ் கல்வி நிறுவனங்களின் தலைவர் குமணன் ஆகியோர் இரங்கல் உரை நிகழ்த்தினர். இறுதியாக நிவாஸ் நன்றி கூறினார். முன்னதாக நாகப்பன் இறுதி நிகழ்வில் உறவுகள் அவருக்கு சடங்குகள் செய்ய முற்பட்ட போது தோழர்கள் அதனை தடுக்க அவர் திராவிடர் கழகத்தில் இருந்த போது எழுதி வைத்து சுவரில் மாட்டி இருந்த மரணசாசனம் அறிவிப்பு அட்டையை எடுத்து உறவினர் கொடுத்து படிக்க வைத்ததால் அவர்கள் அமைதிஆயினர். இதன் மூலம் ஒவ்வொரு பெரியார் தொண்டர்கள் வீட்டில் மரண சாசனம்என்பது அவசியம் இருக்க வேண்டும் என்று தோழர்கள் கருத்து தெரிவித்தனர்.



# நந்தினி படுகொலைக்கு நீதி கேட்டு ஆர்ப்பாட்டம்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 23.01.2017 அன்று மாலை 3 மணியளவில் குடியாத்தம் பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

உண்மையான கொலைக் குற்றவாளிகளை உடனே கைது செய்!

தீண்டாமை வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்!

குற்றவாளிக்கு கடும் தண்டனை வழங்கும் வகையில் நடவடிக்கை எடு! - என காவல் துறையை வலியுறுத்தி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று கண்டன உரையாற்றினார்.

அரியலூர் மாவட்டம் செந்துரை வட்டம் சிறுகாம்பூர் கிராமத்தைச் சேர்ந்த தலித் பெண் நந்தினி (16) கடந்த டிச.29 அன்று இந்து முன்னணியைச் சேர்ந்த கும்பலால் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த கொலையில் ஈடுபட்டுள்ள இந்து முன்னணியைச் சேர்ந்த உண்மையான கொலைக் குற்றவாளிகளை உடனே கைது செய்யவும்,குற்றவாளிக்கு கடும் தண்டனை வழங்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர் தனது கண்டன உரையில், “இந்த கொடூர கொலைக்கு முக்கிய காரணமான இந்து முன்னணி மாவட்டத் தலைவர் ராஜசேகரை உடனே கைது செய்யவேண்டும், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும், இந்த வழக்கில் கடமை ஆற்றத் தவறிய காவல்துறை அதிகாரிகள் மீதும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்” என வலியுறுத்திப் பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திவிக மாவட்ட அமைப்பாளர் இரா.பா.சிவா தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் திலீபன் முன்னிலை வகித்தார். கஜேந்திரன் வரவேற்றார்.

காஞ்சி மக்கள் மன்றம் மகேசு,விடுதலை சிறுத்தைகள் நீலசந்திரகுமார், ஆவணப்பட இயக்குனர் பாலா, கழக தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், த.ஒ.இ. சார்பில் செவ்வேல், மா.பெ.பொக.சார்பில் சீனிபழனி, அம்பேத்கர் தொழிலாளர் இயக்கம் சார்பில் மேயர் சுந்தர்,மறுமலர்ச்சி தமுமுக சார்பில் ஏஜாஸ் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். இறுதியாக அமுல்ராஜ் நன்றி கூறினார்.

### திருச்செங்கோட்டில்

நாமக்கல் மாவட்ட கழக சார்பில் திருச்செங்கோட்டில் அரியலூர் நந்தினிக்கு நீதிகேட்டு ஆர்ப்பாட்டம் எழுச்சி யுடன் நடந்தது. பொள்ளாட்சி, ஈரோடு, திருப்பூர், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 10 பெண்கள் உள்பட சுமார் 70க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். சி.சிவகுமார் வரவேற்றுப் பேசினார். ர.பிரகாசு. திருச்செங்கோடு நகர இளைஞரணி செயலாளர் தலைமை தாங்கினார்.




கண்டன உரையாற்றியோர்: கா.சு.நாகராசு. ஒருங்கிணைப்பாளர்.பெரியார் திக. இரத்தினசாமி.மாநில அமைப்பு செயலாளர். திவிக. திராவிடர் விடுதலைக் கழகம். சிவகாமி. மாநில அமைப்பாளர். தமிழ்நாடு அறிவியல் மன்றம். முல்லை வேந்தன். மேட்டூர் மணிமொழி. திவிக. பொள்ளாச்சி. மா.வைரவேல். மாவட்ட அமைப்பாளர் மு.சாமிநாதன். மாவட்ட தலைவர் அ.முத்துப்பாண்டி. மாவட்ட பொருளாளர். இராபிடல் சேகுவேரா. இராசிபுரம் நகர அமைப்பாளர். திவிக நன்றியுரை: மு.சரவணன், மாவட்ட செயலாளர். திவிக.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பண்பாட்டு நடவடிக்கைகள் ஆகும். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இப்படி படிப்பகங்களை அமைக்கும் வழக்கத்தையே பார்க்க முடியாது. திராவிடர் இயக்கம் இப்படி படிப்பகங்கள் வழியாகவும் முடிதிருத்தும் கடைகள் மற்றும் சலவைக் கடைகள், தேனீர்க் கடைகளில் மக்கள் கூடி பத்திரிகைகளைப் படித்து விவாதிப்பதன் வழியாகவும் அடித்தள மக்கள் இயக்கமாக வளர்ந்தது.

இடையில் இப்படி படிப்பகங்கள் அமைக்கும் முயற்சிகள் கைவிடப்பட்டன.திராவிடர் இயக்கங்கள் அரசியல் கட்சிகளாகி கொள்கை அடையாளங்களை இழந்ததால் நிகழ்ந்த சமூக விபத்துகளில் இதுவும் ஒன்று. மதவாத சக்திகள் ஊர்தோறும் நடைபாதைகளை பொது இடங்களை ஆக்கிரமித்து கோயில் களைகட்டத் தொடங்கின. இந்தக் கோயில்களை வைத்து வசூல் வேட்டை நடக்கிறது. ஜாதி மோதல்களும் மூடநம்பிக்கைகளை வளர்க்கும் நிகழ்ச்சிகளும் நடக்கின்றன. இப்போது ‘குத்தாட்டம்’, ‘ஆபாச நடனங்கள்’ போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகள் நடக்கத் தொடங்கிவிட்டன. உயர்நீதிமன்றமே தலையிட்டு இந்த ஆபாசக் கூத்துகளை கோயில் விழாக்களில் நிறுத்த வேண்டும் என்று உத்தரவிடும் நிலை வந்திருக்கிறது. ‘குடி அரசு’ பத்திரிகையில் பெரியார் பல ஊர்களில் ‘வாசக சாலைகளை’ திறந்த வைத்துப் பேசிய கருத்தாழமிக்க உரைகளைப் படிக்க முடியும்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் இப்பகுதி தோழர்களும் திராவிடர் கழகத்தில் இருந்தபோதே இப்பகுதிகளில் பெரியார் சிலைகளை அமைப்பதை விட படிப்பகங்களை திறப்பதுதான் பெரியார் கொள்கையைப் பரப்புவதற்கான சிறந்த வழி என்று முடிவெடுத்து பல படிப்பகங்களை உருவாக்கினார்கள். அந்தப் படிப்பகங்கள் இப்போது திராவிடர் விடுதலைக் கழகத்தின் நிலைத்த நிறுவனங்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தப் படிப்பகத்தை திராவிடர் விடுதாலைக் கழகம் உருவாக்கியிருந்தாலும் இது இப்பகுதி மக்களின் பயன்படுத்தும் படிப்பகமாகவே செயல்படும். கட்சி அடையாளங்களைக் கடந்து அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏடுகளை நூல்களை படிக்கும் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும் என்பதே இதன் நோக்கம். பொது நலனுக்கு சொந்த சொத்துக்களை வழங்குவோர் என்றென்றும் வரலாற்றில் நிலைத்திருப்பார்கள். இந்தப் படிப்பகத்தில்கூட இடத்தை வழங்கிய மருத்துவரின் படத்தை - நன்றி உணர்வோடு கழகத் தோழர்கள் சுவரில் ஓவியமாக தீட்டி வைத்திருக்கிறார்கள். அவரது மகன் மருத்துவர் துரைசாமி அவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்று பெருமை சேர்த்திருக்கிறார். அவருக்கு நாங்கள் கூறுவ தெல்லாம் “நீங்கள் நம்பிக்கையோடு பொதுநலனுக்குப் பயன்படும் நோக்கத்தில் இந்த இடத்தை வழங்கியிருக் கிறீர்கள். அந்த நம்பிக்கையில் இம்மியளவுப் பிறழாமல் திராவிடர் விடுதலைக் கழகம், இந்த படிப்பகத்தையும் இடத்தையும் சமுதாய நலனுக்காகவே பயன்படுத்தும் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறோம்” என்று குறிப்பிட்டார்.

சேலம் மேற்கு மாவட்டக் கழகத் தலைவர் கு. சூர்யகுமார், மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன், ஒன்றியத் தலைவர் செதுர்மலிங்கம் முன்னின்று ஏற்பாடுகளை செய்திருந்தனர். சி. கோவிந்தராசு தலைமை தாங்கினார். அமைப்புச் செயலாளர் ப. இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, சூலூர் பன்னீர்செல்வம் மற்றும் மேட்டூர், கொளத்தூர் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். சென்னையிலிருந்து மாவட்ட செயலாளர் உமாபதியுடன் பத்து கழகத் தோழர்கள், கொளத்தூர், நங்கவள்ளியில் நடந்த தமிழ்ப் புத்தாண்டு விழா மற்றும் படிப்பகத் திறப்பு விழாக்களில் இரு நாட்களும் பங்கேற்றனர்.

படிப்பகத் திறப்பைத் தொடர்ந்து கொளத்தூரில் பேருந்து நிலையம் அருகே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பெரியார் பிறந்த நாள், தமிழர் திருநாள் விழாவில் பங்கேற்க தோழர்களும் தோழியர்களும் பறை இசை முழங்க ஊர்வலமாக சென்றனர். விழாவில் விரட்டு கலை பண்பாட்டு மய்யம் சார்பில் மாபெரும் கலைவிழா, கழகப் பரப்புரை விழாவாக 3 மணி நேரம் நடந்தது. ஜாதி ஒழிப்பு - பெண்ணுரிமை - பகுத்தறிவு கொள்கைகளை விளக்கும் நாடகங்கள், பாடல்கள், கரகாட்டம், ஒயிலாட்டம், கும்மி, கோலாட்டம் போன்ற பல்வேறு கலை நிகழ்வுகள் நடந்தன. மாநாடுகளைப்போல பெருங்கூட்டம் திரண்டிருந்தது. இடையிடையே மழை பெய்த போதும் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டு மீண்டும் தொடர்ந்தன. பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். கொளத்தூர் நகர செயலாளர் சி.இராமமூர்த்தி நன்றி கூற இரவு 10.30 மணிக்கு நிகழ்ச்சி முடிவடைந்தது.

---

## ‘பெரியார் பேரொளி’ சதாசிவம் நினைவு நாள்



‘பெரியார் பேரொளி’ பட்டுக்கோட்டை வளவன் (எ) சதாசிவம் முதலாமாண்டு நினைவு நாளான 19.1.2017 அன்று மேட்டூர் அணை தந்தை பெரியார் படிப்பகத்தில் அவரின் உருவப் படத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்தார்.

சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி. கோவிந்தராசு, நகர செயலாளர் அ. சுரேசுகுமார், மாவட்ட அமைப்பாளர் அ. அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு. குமரப்பா, மாவட்ட பொருளாளர் சு. சம்பத் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## திருப்பூருக்கு புதிய பொறுப்பாளர்கள்

முகில் ராசு - மாவட்டத் தலைவர்.

நீதிராசன் - மாவட்டச் செயலாளர்.

அகிலன், சங்கீதா- மாவட்ட அமைப் பாளர்கள் .

தனபால் - மாநகரத் தலைவர்

மாதவன் - மாநகரச் செயலாளர்.

முத்து, யமுனா - மாநகர அமைப் பாளர்கள்.

கருணாநிதி - வடக்குப் பகுதி அமைப் பாளர்.

ராமசாமி - தெற்கு பகுதி அமைப்பாளர் .

11.12.2016 அன்று கழக கட்டமைப்பு நிதி வழங்கும் நிகழ்வில் கழகத் தலைவரால் அறிவிக்கப்பட்டது.

## விழுப்புரம் மாவட்டத்தில் 30 தோழர்கள் கழகத்தில் இணைந்தனர்

விழுப்புரம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கலந்தாய்வுக் கூட்டம் கண்டமங்கலம் ஒன்றியம் வனத்தாம்பாளையம் கிராமத்தில் இளையரசன் இல்லத்தில் நடைபெற்றது. ஜனவரி 8 மாலை 3 மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் சிவராந்தகம், பள்ளி மேனயனூர், மருதூர் வனத்தாம் பாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து முப்பது தோழர்கள், இளையரசன் தலைமையில் கழகத்தில் இணைந்தனர். பின் புதிய தோழர்களிடம் கழகச் செயல்பாடுகள் குறித்து விழுப்புரம் அய்யனார் உரை யாற்றினார்.

இந்நிகழ்வில் புதுச்சேரி தீனா, மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் க. இராமன், கி. சாமிதுரை, மா. குமார், சென்னை ஜான் மண்டேலா ஆகியோர் பங்கேற்றனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தமிழ்ப் புத்தாண்டு கலை விழாக் காட்சிகள்

நங்கவள்ளி





கொளத்தூர்





காவலாண்டியூர்



கொளத்தூர் பேரணி



சென்னை









Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 03th Feburary 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN